[සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
Geography I

22 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

16778

சுட்டெண் : ..........................

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ இவ்வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.
- ✳ **பகுதி I, 30** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. **பகுதி I** இற்கான விடைகள் இத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்.
- ✳ பகுதி **I** மற்றும் பகுதி **II** ஆகியவற்றுக்குரிய இரண்டு விடைத்தாள்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்.

**பரீட்சகர்களின் உபயோகத்திற்கு மட்டும்.**

| | வினா இல. | புள்ளிகள் |
|---|---|---|
| பகுதி I | 1 - 30 | |
| பகுதி II | 1 | |
| | 2 | |
| | 3 | |
| மொத்தம் | | |

| | கையொப்பம் | குறியீட்டு எண் |
|---|---|---|
| 1 ஆவது பரீட்சகர் | | |
| 2 ஆவது பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |
| கணிதப் பரிசோதகர் | | |

## பகுதி I

● ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையினைத் தெரிவுசெய்து, அதற்குரிய இலக்கத்தினை எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டில்** எழுதுக.

**1.** இடவிளக்கப் படமொன்றில் காட்டப்படும் மூன்று பண்பாட்டு அம்சங்களைக் கொண்டுள்ள சரியான விடை,
(1) குடியிருப்புகள், வெளியரும்பு பாறைகள், வரலாற்று இடங்கள்
(2) நிலப் பயன்பாடு, நீர்ப்பாசனம், குடியிருப்புகள்
(3) திரிகோணகணித நிலையம், ஆறு, வீட்டுத்தோட்டங்கள்
(4) காடுகள், குழிவுச் சாய்வு, வீதிகள்
(5) பொதுச் சேவைகள், கடனீரேரிகள், வீதிகள் (……)

**2.** பின்வரும் விடைகளுள் எது, பாரிய அளவுத்திட்டப் படமொன்றின் வகைக்குறிப்பின்னத்தினைக் குறித்துக் காட்டுகின்றது ?
(1) 1 : 63360 (2) 1 : 5000 (3) 1 : 50000 (4) 1 : 250000 (5) 1 : 600000 (……)

**3.** பின்வரும் அம்சங்களில் எது 1 : 50000 இடவிளக்கப் படங்களில் அளவுத்திட்டமின்றி வரையப்படும் ?
(1) பெருந்தெரு (2) புகையிரதப் பாதை (3) ஆறு
(4) பொதுக் கட்டடம் (5) குளம் (……)

**4.** கலப்பு பார் வரைபொன்றின் பொருத்தமான பயன்பாட்டினைக் கொண்டிருக்கும் சரியான விடை,
(1) பிரதேசமொன்றின் மாதாந்த மழைவீழ்ச்சி
(2) இலங்கையின் வருடாந்த நெல் உற்பத்தி
(3) குறிப்பிட்ட வருடமொன்றில் இலங்கையில் புலம்பெயர்ந்தோரின் மொத்த எண்ணிக்கை
(4) குடித்தொகையொன்றின் வயது மற்றும் பால் சேர்க்கை
(5) இலங்கையில் கைத்தொழில் உற்பத்தியின் துறைசார் பரம்பல் (……)

**5.** குடியொன்றின் ஒவ்வொரு அங்கத்தவரையும் தெரிவுசெய்வதற்கான சந்தர்ப்பமொன்றை உறுதிப்படுத்தும் மாதிரியெடுப்பு முறையானது
(1) ஒழுங்குமுறை மாதிரியெடுப்பு (2) எளிய எழுமாற்று மாதிரியெடுப்பு
(3) நோக்குடனான மாதிரியெடுப்பு (4) படையாக்க மாதிரியெடுப்பு
(5) கொத்து மாதிரியெடுப்பு (……)

[பக். 2 ஐப் பார்க்க

**6.** பின்வரும் வகைகளுள் திரட்டு மீடிறனையும் வகுப்பு ஆயிடையையும் ஒரே தடவையில் காட்டுவதற்கு மிகவும் பொருத்தமான வரைபு எது ?
(1) கூட்டு கோட்டு வரைபு
(2) இழைவரையம்
(3) ஒகிவ் வரைபு
(4) மீடிறன் பல்கோணி
(5) சதவீத கூட்டுபார் வரைபு
(……)

**7.** தரவுப் பரம்பல் ஒன்றில் முறையே மத்திய போக்கு மற்றும் பிரிக்கையைக் காட்டுவதற்குப் பயன்படுத்தக்கூடிய இரண்டு புள்ளிவிபர வரைபுகளைப் பின்வரும் விடைகளுள் எது சரியாகக் காட்டுகின்றது ?
(1) பிரிக்கை வரைபடம் மற்றும் மீடிறன் பல்கோணி
(2) மீடிறன் பல்கோணி மற்றும் எளிய கோட்டு வரைபு
(3) இழைவரையம் மற்றும் பிரிக்கை வரைபடம்
(4) மீடிறன் பல்கோணி மற்றும் ஒகிவ் வரைபு
(5) இழைவரையம் மற்றும் கூட்டு கோட்டு வரைபு
(……)

**8.** பின்வரும் விடைகளுள் எது புவிமேற்பரப்பில் உள்ள பௌதிக மற்றும் பண்பாட்டு அம்சங்கள் இரண்டினையும் ஒன்றாகக் காட்டும் படத்தினைக் குறித்துக் காட்டுகின்றது ?
(1) காலநிலைப் படம்
(2) புவிச்சரிதவியல் படம்
(3) சனத்தொகைப் பரம்பல் படம்
(4) இடவிளக்கப் படம்
(5) நிலப் பயன்பாட்டுப் படம்
(……)

**9.** பின்வரும் விடைகளுள் எது, புவியியல் தகவல் ஒழுங்கு செயன்முறை முழுவதையும் சரியாகக் குறித்துக் காட்டுகிறது ?
(1) யதார்த்த உலகின் பௌதிக மற்றும் மானிடப் புவியியல் தகவல்களைச் சேமித்து வைத்தல்
(2) பண்பு ரீதியான அட்டவணையொன்றில் இடஞ்சார்ந்த மற்றும் இடஞ்சாரா தரவுகளை உள்ளீடு செய்தல்
(3) ஸ்கான் (scan) செய்யப்பட்ட படமொன்றினைப் பயன்படுத்தி, தேசிய ஆள்கூற்று முறைமையில் படமொன்றினை அமைத்தல்
(4) கணினி முறைமையின் மூலம் புவியியல் தரவுகளைச் சேமித்து வைத்தல், கையாளுதல், பகுப்பாய்வு செய்தல், நிர்வகித்தல், முன்வைத்தல்
(5) படவரைகலையியல் முறைகளைப் பயன்படுத்தி புவியியல் தரவுகளைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், படமொன்றினை முன்வைத்தல்
(……)

**10.** தொலையுணர்வு தொழினுட்பத்தின் இரண்டு பிரதான தரவு மூலாதாரங்களைச் சரியாகக் காட்டும் விடை,
(1) செய்மதிப் படிமங்கள் மற்றும் எண்ணிலக்கப் (Digital) படங்கள்
(2) எண்ணிலக்கப் படங்கள், மற்றும் 3D படங்கள்
(3) கருப்பொருட் படங்கள் மற்றும் விமான ஒளிப்படங்கள்
(4) செய்மதிப் படிமங்கள் மற்றும் விமான ஒளிப்படங்கள்
(5) GPS படங்கள் மற்றும் ஒத்திசைவுப் (Analog) படங்கள்
(……)

**11.** நிரம்பியநிலை மட்டத்தினை அடையும் வரை எழுச்சியடையும் வளியின் வெப்பநிலையில் ஏற்படும் படிப்படியான வீழ்ச்சியினைக் குறிப்பது
(1) வெப்பஞ்செல்லாநிலை நழுவுவீதம்
(2) சூழலியல் நழுவுவீதம்
(3) ஈரவெப்பஞ்செல்லா நழுவுவீதம்
(4) வரண்ட வெப்பஞ்செல்லா நழுவுவீதம்
(5) நிலையற்ற நழுவுவீதம்
(……)

**12.** 'படிவுவீழ்ச்சியினை' எதிர்வுகூறுவதற்குப் பயன்படுத்தக்கூடிய வளிமண்டல ஈரப்பதனின் பொருத்தமான அளவீடு எது ?
(1) தனியீரப்பதன்
(2) சாரீரப்பதன்
(3) தன்னீரப்பதன்
(4) நிரம்பாநிலை ஈரப்பதன்
(5) மிகைக் குளிர்ச்சி ஈரப்பதன்
(……)

**13.** இலங்கையில் இரண்டாவது இடை–மொன்சூன் காலம் என்பது,
(1) ஒக்டோபரிலிருந்து நவம்பர் வரை
(2) மார்ச்சிலிருந்து ஏப்பிரல் வரை
(3) மேயிலிருந்து செப்தெம்பர் வரை
(4) டிசம்பரிலிருந்து பெப்ரவரி வரை
(5) நவம்பரிலிருந்து ஜனவரி வரை
(……)

**14.** இலங்கையில் ஆற்று வடிநிலங்களின் மொத்த எண்ணிக்கை
(1) 96
(2) 98
(3) 103
(4) 104
(5) 106
(……)

[பக். 3 ஐப் பார்க்க

**15.** ஆபிரிக்கக் கண்டத்தின் மேற்குக் கரையோரத்திற்கு அருகாமையில் பாயும் சமுத்திர நீரோட்டம் எது ?
(1) தென் மத்தியகோடு (2) மொசாம்பிக்
(3) கனாறிஸ் (4) பெங்குவாலா
(5) பெருவியன் (……)

**16.** பாலைவனப் பகுதிகளில் காற்றின் அரித்தலினால் விருத்தி செய்யப்படும் நிலவுருவம் எது ?
(1) பாக்கன் (2) யாடாங்கு
(3) நட்சத்திரக் குன்றுகள் (4) வரண்ட பள்ளத்தாக்குகள்
(5) வாடி (……)

**17.** இழையமைப்பின் அடிப்படையில் பாகுபடுத்தப்பட்ட தலையீட்டுத் தீப்பாறைகளின் பிரதான வகைகளைச் சரியாகத் தரும் விடை,
(1) கருங்கல், தயோரைற், கபுறோ (2) பசோல்ட், கருங்கல், கபுறோ
(3) படிகம், பசோல்ட், கபுறோ (4) அன்டிசைற், கருங்கல், கபுறோ
(5) ஒலிவைன், படிகம், பசோல்ட் (……)

**18.** ஆறொன்றில் அதன் சுமைகள் கொண்டு செல்லப்படும்பொழுது இடம்பெறும் மூன்று செயன்முறைகளைக் காட்டும் சரியான விடை
(1) தேய்வு, சுரண்டல், இழுத்துச் செல்லல் (2) கரைசல், படிதல், இழுத்துச் செல்லல்
(3) இழுத்துச் செல்லல், பாய்ச்சல், தொங்கல் (4) சுரண்டல், பாய்ச்சல், கரைசல்
(5) படிதல், சுரண்டல், கரைசல் (……)

**19.** பின்வரும் விடைகளுள் எது சான் அன்றியாஸ் குறையில் சந்திக்கும் இரண்டு புவியோட்டுத் தகடுகளைக் காட்டுகின்றது ?
(1) யூறாசியன் மற்றும் பிலிப்பைன்ஸ் (2) ஸ்கோசியா மற்றும் நஷ்கா
(3) அராபியன் மற்றும் யூறாசியன் (4) பசுபிக் மற்றும் வட அமெரிக்கன்
(5) நஷ்கா மற்றும் கொக்கோஸ் (……)

**20.** இலங்கையில் வரண்ட கலப்புக் காடுகள் பெரும்பாலும் காணப்படும் இடம் எது ?
(1) சிங்கராசா (2) கன்னெலிய
(3) யால (4) ஹக்கல
(5) சமனலகந்த (……)

**21.** முதனிலைப் பண்டப் பொருட்களின் சர்வதேச வர்த்தகத்தின் பாய்ச்சல் திசை காணப்படுவது,
(1) குறைவிருத்தி நாடுகளிலிருந்து குறைவிருத்தி நாடுகளுக்கு ஆகும்.
(2) குறைவிருத்தி நாடுகளிலிருந்து மிகவும் விருத்திபெற்ற நாடுகளுக்கு ஆகும்.
(3) மிகவும் விருத்திபெற்ற நாடுகளிலிருந்து குறைவிருத்தி நாடுகளுக்கு ஆகும்.
(4) மிகவும் விருத்திபெற்ற நாடுகளிலிருந்து மிகவும் விருத்திபெற்ற நாடுகளுக்கு ஆகும்.
(5) மிகக் குறைவிருத்திபெற்ற நாடுகளிலிருந்து குறைவிருத்தி நாடுகளுக்கு ஆகும். (……)

**22.** இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் குடித்தொகை வெடிப்பினால் ஏற்பட்ட விளைவு,
(1) வளர்முக நாடுகளில் பிறப்பு வீதங்களில் குறைவு ஏற்படாமல் இறப்பு வீதங்களில் ஏற்பட்ட சடுதியான வீழ்ச்சி
(2) ஐரோப்பாவில் போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் மீள்குடியேற்றுவதற்கு அரசாங்கக் கொள்கைகள் மூலமான முயற்சிகள்
(3) விருத்தியடைந்துவரும் மற்றும் விருத்திபெற்ற நாடுகள் இரண்டிலும் பாரிய கைத்தொழிலாக்க முயற்சிகள்
(4) யுத்த காலத்தில் சிறியளவான பிறப்புகளுடன் ஏற்பட்ட பாரிய இறப்புகள்
(5) வளர்முக நாடுகளிலிருந்து விருத்திபெற்ற நாடுகளை நோக்கி அதிகரித்த இடப்பெயர்வுகள் (……)

**23.** சூழலியல் நியதிவாதம் என்பதன்படி,
(1) பௌதிகச் சூழலுக்கு ஏற்ப மக்கள் தம்மை இசைவாக்கிக் கொள்ள முடியும்.
(2) பௌதிகச் சூழல் மனித நடவடிக்கைகளில் வரையறைகளை ஏற்படுத்துகின்றது.
(3) பௌதிகச் சூழல் என்பது மனித பயன்பாட்டுக்குரியது.
(4) மக்கள் தமது பௌதிகச் சூழலைத் தீர்மானித்துக் கொள்வர்.
(5) பௌதிகச் சூழல் சமூக விருத்தியை ஏற்படுத்துகின்றது. (……)

**24.** பெருநகரக் கூட்டு (megalopolis) என்ற பதம் பின்வருவனவற்றுள் எங்கு அமைந்துள்ள பெருநகரப் பகுதிகளின் தொடரை விவரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது ?
(1) ஐக்கிய அமெரிக்காவில் பொஸ்டனிலிருந்து வாஷிங்டன் வரை விரிவடைந்துள்ள பிரதேசம்
(2) ஐக்கிய அமெரிக்காவில் சான் பிரான்சிஸ்கோவிலிருந்து சந்தியாகோ வரை விரிவடைந்துள்ள பிரதேசம்
(3) யப்பானில் டோக்கியோவிலிருந்து யொக்கோகாமா வரை விரிவடைந்துள்ள பிரதேசம்
(4) ஐக்கிய இராச்சியத்தில் லண்டனிலிருந்து உப நகரப் பகுதிகள் வரை விரிவடைந்துள்ள பிரதேசம்
(5) ஜேர்மனியில் றைன்-ரூர் பிரதேசம் (……)

[பக். 4 ஐப் பார்க்க

இங்கே வெட்டுக

25. 2010-2012 காலத்தில் உலகின் பிரதான வாகன உற்பத்தி நாடுகளை மட்டும் காட்டும் சரியான விடை
   (1) ஐக்கிய அமெரிக்கா, யப்பான், தென் கொரியா, ஜேர்மனி
   (2) சீனா, யப்பான், ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மனி
   (3) சீனா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மனி
   (4) யப்பான், இந்தியா, தாய்லாந்து, ஐக்கிய இராச்சியம்
   (5) சீனா, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, தாய்லாந்து (……)

26. உலகில் நூறு சதவீதம் நகராக்கத்தினைக் கொண்ட நாடு எது ?
   (1) ஐக்கிய இராச்சியம்  (2) ஐக்கிய அமெரிக்கா
   (3) சிங்கப்பூர்  (4) யப்பான்
   (5) ஜேர்மனி (……)

27. உலகில் தலா 100 000 மக்களுக்கு அதிக எண்ணிக்கையிலான மருத்துவர்களைக் கொண்ட நாடு எது ?
   (1) எஸ்தோனியா  (2) ஐக்கிய இராச்சியம்  (3) ஐக்கிய அமெரிக்கா
   (4) கியூபா  (5) சிங்கப்பூர் (……)

28. உலகில் தற்பொழுது பாரிய அளவில் இயற்கை வாயுவை உற்பத்தி செய்யும் இரண்டு நாடுகள் எவை ?
   (1) ரஷ்யா மற்றும் ஐக்கிய அமெரிக்கா  (2) கனடா மற்றும் ஐக்கிய அமெரிக்கா
   (3) ரஷ்யா மற்றும் ஐக்கிய இராச்சியம்  (4) ஐக்கிய அமெரிக்கா மற்றும் நோர்வே
   (5) ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஈரான் (……)

29. இலங்கையில் நிலப் பகுதியைப் பொறுத்தவரை முறையே பெரியதும் சிறியதுமான இரண்டு மாவட்டங்களைக் காட்டும் சரியான விடை
   (1) மொனறாகலை மற்றும் காலி  (2) அனுராதபுரம் மற்றும் கொழும்பு
   (3) பொலன்னறுவை மற்றும் கம்பஹா  (4) அனுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம்
   (5) அம்பாறை மற்றும் கொழும்பு (……)

30. ‘சுருங்கிய வயதுக் கூம்பகம்’ ஒன்றின் மூன்று பிரதான அம்சங்களைக் குறித்துக் காட்டும் சரியான விடை யாது ?
   (1) குறைந்த வாழ்வு எதிர்பார்ப்புக் காலம், உயர் பிறப்பு வீதம், குறைந்த இறப்பு வீதம்
   (2) உயர் வாழ்வு எதிர்பார்ப்புக் காலம், குறைந்த பிறப்பு வீதம், குறைந்த இறப்பு வீதம்
   (3) உயர் வாழ்வு எதிர்பார்ப்புக் காலம், குறைந்த பிறப்பு வீதம், உயர் இறப்பு வீதம்
   (4) குறைந்த வாழ்வு எதிர்பார்ப்புக் காலம், குறைந்த பிறப்பு வீதம், குறைந்த இறப்பு வீதம்
   (5) உயர் வாழ்வு எதிர்பார்ப்புக் காலம், உயர் பிறப்பு வீதம், உயர் இறப்பு வீதம் (……)

The National e-learning portal for education

* *

[பக். 5 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
Geography I

22 T I

16778

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

※ **முதலாம்** வினாவுக்கும் 2ஆம் 3ஆம் வினாக்களிலிருந்து **ஒரு** வினாவையும் தெரிந்தெடுத்து **இரண்டு வினாக்களுக்கு மாத்திரம்** விடை எழுதுக.

※ 1:50000 அளவுத்திட்டத்திலமைந்த மத்துகம இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதியும் **இரண்டு** வரைபுத்தாள்களும் வழங்கப்படும்.

1. இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1:50000 என்னும் அளவுத்திட்டத்திலமைந்த மத்துகம இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. படத்தின் சமவுயரக்கோட்டு இடைவெளி 100 அடியாகும். இப்படத்தினைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**குறிப்பு:**
※ **படத்தின் மேல் விடைகள் எழுதப்படலாகாது.**
※ விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும் உப பிரிவு இலக்கத்தினையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
※ உமது விடைத்தாளுடன் படத்தினை இணைக்க **வேண்டாம்.**

(i) படத்தில் A, B, C, மற்றும் D சதுரம் என்பவற்றினால் குறித்துக் காட்டப்படும் பௌதிக அம்சங்களை அடையாளம் செய்து பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) படத்திலுள்ள பிரதேசத்தில் காணப்படும் பிரதான நிலப் பயன்பாட்டு வகைகளை அடையாளம் செய்து பெயரிடுக. (02 புள்ளிகள்)

(iii) வழங்கப்பட்டுள்ள வரைபுத்தாளினைப் பயன்படுத்தி படத்திலுள்ள பிரதேசத்தில் E மற்றும் F க்கு இடையில் காணப்படும் கோட்டின் வழியே உள்ள பகுதிக்கான குறுக்குப் பக்கப்பார்வை (cross section) ஒன்றினை வரைக. (04 புள்ளிகள்)

(iv) படப் பிரதேசத்தில் ஒரு சதுர கிலோமீற்றர் பகுதியைக் காட்டும் சதுரம் ஒன்றினை 1 : 25 000 அளவுத்திட்டத்தில் வரைக. (02 புள்ளிகள்)

(v) படப் பிரதேசத்தில் காணப்படும் வடிநிலப் பாங்கின் **இரண்டு** பிரதான அம்சங்களை விவரிக்குக. (04 புள்ளிகள்)

(vi) படப் பிரதேசத்தின் நிலப் பயன்பாட்டுப் பாங்கு மற்றும் குடியிருப்புகளின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணிகளை விவரிக்குக. (06 புள்ளிகள்)

2. (i) செய்மதிப் படிமம் (Satellite Image) என்பதனால் கருதப்படுவது யாது எனச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (01 புள்ளி)

(ii) செய்மதிப் படிமத்துக்கும் படமொன்றுக்கும் இடையில் காணப்படும் **இரண்டு** வேறுபாடுகளை விவரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) புவியியல் தகவல் ஒழுங்கு (GIS) தொழினுட்பத்தைப் பயன்படுத்தி படங்களை அமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் **மூன்று** வகையான தரவு மூலாதாரங்களைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(iv) வினா (iii) இல் உம்மால் பெயரிடப்பட்ட மூன்று தரவு மூலாதாரங்களினதும் **ஒவ்வொரு** பண்பினை விவரிக்குக. (06 புள்ளிகள்)

(v) பூகோள நிலைப்படுத்தல் முறைமைத் (GPS) தொழினுட்பத்தின் **மூன்று** பயன்பாடுகளை விவரிக்குக. (06 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

**3.** இலங்கையில் மார்ச் 28, 2014 இல் தேர்ந்தெடுக்கப்பட்ட **பதினைந்து** நிலையங்களுக்குரிய வெப்பநிலையை **அட்டவணை 1** காட்டுகின்றது.

**அட்டவணை 1**

| நிலையம் | வெப்பநிலை (°C) |
|---|---|
| குருநாகல் | 36.4 |
| மகாஇலுப்பள்ளம | 35.6 |
| மன்னார் | 32.7 |
| நுவரெலியா | 21.1 |
| புத்தளம் | 33.8 |
| பொத்துவில் | 30.8 |
| இரத்மலானை | 32.1 |
| இரத்தினபுரி | 34.6 |
| திருகோணமலை | 31.5 |
| மொனறாகலை | 32.8 |
| பதுளை | 27.8 |
| பண்டாரவளை | 24.8 |
| அம்பாந்தோட்டை | 29.4 |
| யாழ்ப்பாணம் | 34.8 |
| கட்டுகஸ்தோட்டை | 33.2 |

*மூலம்:* வளிமண்டலவியல் திணைக்களம்

(i) **அட்டவணை 1** இல் தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்திப் பின்வருவனவற்றினைக் கணிப்பிடுக.

(அ) இடை **(03 புள்ளிகள்)**

(ஆ) இடையம் **(03 புள்ளிகள்)**

(இ) இடைக் காலணை வீச்சு **(04 புள்ளிகள்)**

(ii) **அட்டவணை 1** இல் உள்ள தரவுகளைப் பயன்படுத்தி பிரிக்கை வரைபடமொன்றினை (Dispersion diagram) அமைக்குக. **(06 புள்ளிகள்)**

(iii) பிரிக்கை வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள வெப்பநிலைப் பரம்பலில் காணப்படும் **இரண்டு** முனைப்பான அம்சங்களை விவரிக்குக. **(04 புள்ளிகள்)**

* * *

16763

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

**22 I**

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
Geography I




SCALE 1: 50 000

සමෝච්ච රේඛා අන්තරය අඩි 100
சமவுயரக்கோடு இடைவெளி 100 அடி
Contour Interval 100 feet

16763

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුවයි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

| | | |
|---|---|---|
| භූගෝල විද්‍යාව II<br>புவியியல் II<br>Geography II | 22 T II | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |

**அறிவுறுத்தல்கள் :**

* ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I - பௌதிகப் புவியியல்

**1.** (i) காலநிலையைக் கட்டுப்படுத்தும் **நான்கு** காரணிகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) பூகோள காலநிலை மாற்றத்துக்குப் பொறுப்பான **இரண்டு** இயற்கைக் காரணிகளையும் **இரண்டு** மானிடக் காரணிகளையும் விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) பூகோள காலநிலை மாற்றத்தின் **நான்கு** விளைவுகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

(iv) பூகோள காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் மோசமான தாக்கங்களைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள **மூன்று** நடவடிக்கைகளை விவரிக்குக. (06 புள்ளிகள்)

**2.** (i) நிலவுருவங்களின் உருவாக்கத்துடன் இணைந்து காணப்படும் அகப் பிறப்புக்குரிய மற்றும் புறம் பிறந்த விசைகள் என்பதனால் கருதப்படுவது யாது என்பதனைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) அகப் பிறப்புக்குரிய விசைகளுடன் இணைந்து காணப்படும் **இரண்டு** அசைவுகளைப் பெயரிட்டு, உம்மால் பெயரிடப்பட்ட அசைவுகளுள் **ஒன்றினால்** உருவாக்கப்படும் **இரண்டு** நிலவுருவங்களை விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) நிலச்சரிவுகளை ஏற்படுத்தும் **நான்கு** பௌதிகக் காரணிகளை விவரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) பௌதிகச் சூழலின் மீது நிலச்சரிவுகளினால் ஏற்படுத்தப்படும் தாக்கத்தினை உதாரணங்களுடன் ஆராய்க. (06 புள்ளிகள்)

**3.** (i) பனிக்கட்டியாற்றுச் செயற்பாட்டின் காரணமாக ஏற்படும் **மூன்று** வழிகளிலான அரித்தலினைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) பள்ளத்தாக்குப் (மலைப்) பனிக்கட்டியாறுகளினால் உருவாக்கப்படும் **மூன்று** வகையான படிதல் நிலவுருவங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) பள்ளத்தாக்குப் (மலைப்) பனிக்கட்டியாறுகளில் காணப்படும் **மூன்று** அரித்தல் நிலவுருவங்களை வரைபடங்களின் உதவியுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) பனிக்கட்டியாற்று நிலவுருவங்களின் பொருளாதார முக்கியத்துவத்தினைக் குறிக்கும் **இரண்டு** காரணிகளை உதாரணங்களுடன் ஆராய்க. (05 புள்ளிகள்)

**4.** (i) 'கரையோரப் பிரதேசங்கள்' ஏன் முக்கியத்துவமானவை ? **நான்கு** காரணங்களைத் தருக. (04 புள்ளிகள்)

(ii) இலங்கையின் கரையோரச் சூழற்றொகுதியின் தரமிழப்புக்குப் பொறுப்பான **மூன்று** காரணங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) இலங்கையின் கரையோர அரித்தலினால் ஏற்படும் **நான்கு** மோசமான விளைவுகளைச் சுருக்கமாக விவரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) இலங்கையின் கரையோர அரித்தலினால் ஏற்படும் மோசமான தாக்கங்களைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்டுவரும் **மூன்று** பிரதான தணிப்பு நடவடிக்கைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

## பகுதி II - மானிடப் புவியியல்

**5.** 1950 மற்றும் 2013 இல் சனத்தொகையின் அடிப்படையில் உலகின் 15 பாரிய நகரங்கள் வகுதி ஒழுங்கில் **அட்டவணை 1** இல் காட்டப்படுகின்றது.

**அட்டவணை 1**

**1950 மற்றும் 2013 இல் உலகின் பாரிய நகரங்கள்**

| 1950 | | | 2013 | | |
|---|---|---|---|---|---|
| வகுதி | நகரம் | சனத்தொகை (மில்லியன்களில்) | வகுதி | நகரம் | சனத்தொகை (மில்லியன்களில்) |
| 1 | நியூயோர்க் ... | 12.3 | 1 | டோக்கியோ ... | 34.8 |
| 2 | லண்டன் ... | 10.4 | 2 | குவாங்சு ... | 31.7 |
| 3 | றைன்-றூர் ... | 6.9 | 3 | சாங்காய் ... | 28.9 |
| 4 | டோக்கியோ ... | 6.7 | 4 | யகார்த்தா ... | 26.4 |
| 5 | சாங்காய் ... | 5.8 | 5 | சியோல் ... | 25.8 |
| 6 | பரிஸ் ... | 5.5 | 6 | டெல்கி ... | 24.0 |
| 7 | புவனஸ் அயர்ஸ் ... | 5.3 | 7 | மெக்சிக்கோ நகரம் ... | 23.8 |
| 8 | சிக்காக்கோ ... | 4.9 | 8 | கராச்சி ... | 22.7 |
| 9 | மொஸ்கோ ... | 4.8 | 9 | மணிலா ... | 22.2 |
| 10 | கல்கத்தா ... | 4.6 | 10 | நியூயோர்க் ... | 21.6 |
| 11 | லொஸ் ஏஞ்சல்ஸ் | 4.0 | 11 | சாயோபோலோ ... | 21.5 |
| 12 | ஒசாக்கா ... | 3.8 | 12 | மும்பாய் ... | 21.4 |
| 13 | மிலான் ... | 3.5 | 13 | பெய்ஜிங் ... | 19.3 |
| 14 | பம்பாய் (மும்பாய்)... | 3.0 | 14 | லொஸ் ஏஞ்சல்ஸ் ... | 17.2 |
| 15 | மெக்சிக்கோ நகரம்... | 3.0 | 15 | ஒசாக்கா ... | 16.8 |

**மூலம்:** Potter et al (2004) and The Free Encyclopedia: The Principal Agglomerations of the World, 2013

(i) **அட்டவணை 1** இனைத் தொடர்புபடுத்தி உலகின் பாரிய நகரங்களின் சனத்தொகையில் ஏற்பட்டு வரும் **மூன்று** மாற்றங்களை அடையாளம் செய்க. (03 புள்ளிகள்)


(ii) வளர்முக நாடுகளில் காணப்படும் விரைவான நகராக்கத்துக்குப் பொறுப்பான **நான்கு** காரணங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) வளர்முக நாடுகளின் விரைவான நகராக்கத்துடன் இணைந்து காணப்படும் **ஐந்து** பிரச்சினைகளை ஆராய்க. (05 புள்ளிகள்)

(iv) இலங்கையின் மெதுவான நகர வளர்ச்சிக்கு அடிப்படையான **மூன்று** காரணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)

**6.** (i) **புனையா வரைபடம் 1** இல், இரண்டு வெவ்வேறு வகையான கிராமியக் குடியிருப்புக்கள் காட்டப்பட்டுள்ளன.

**புனையா வரைபடம் 1**




(அ) (A) மற்றும் (B) இல் காட்டப்பட்டுள்ள குடியிருப்புக்களின் வகைகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) (அ) இல் பெயரிடப்பட்ட ஒவ்வொரு குடியிருப்பிலும் காணப்படும் **இரண்டு** முனைப்பான அம்சங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) இலங்கையின் வெவ்வேறு வகையான கிராமியக் குடியிருப்புக்களை வகைப்படுத்துக. (04 புள்ளிகள்)

(iii) மேலே (ii) இல் உம்மால் குறிப்பிடப்பட்டவற்றுள் ஏதாவது **இரண்டு** வகைகளைத் தெரிவுசெய்து, அவற்றின் முனைப்பான அம்சங்களைப் பொருத்தமான விளக்கப் படங்களுடன் விவரிக்குக. (10 புள்ளிகள்)

**7.** (i) பல்தேசிய நிறுவனங்கள் என்பதனால் கருதப்படுவது யாதெனக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) உலகின் **நான்கு** பிரதான பல்தேசிய நிறுவனங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(iii) உலகப் பொருளாதாரத்தில் பல்தேசிய நிறுவனங்களின் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டும் **நான்கு** காரணிகளைச் சுருக்கமாக விவரிக்குக. (08 புள்ளிகள்)

(iv) பல்தேசிய நிறுவனங்களுடன் இணைந்து காணப்படும் **நான்கு** பிரச்சினைகளைச் சுருக்கமாக விவரிக்குக. (08 புள்ளிகள்)

**8.** (i) பெற்றோலிய இரசாயனக் கைத்தொழில் என்பது எதனைக் கருதுகின்றது என்பதனைத் தெளிவுபடுத்துக. (02 புள்ளிகள்)

(ii) பெற்றோலிய இரசாயனக் கைத்தொழிலின் **நான்கு** பிரதான உற்பத்திகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(iii) பெற்றோலிய இரசாயனக் கைத்தொழிலின் அமைவிடத்தினைத் தீர்மானிக்கும் **நான்கு** காரணிகளைச் சுருக்கமாக விவரிக்குக. (08 புள்ளிகள்)

(iv) பெற்றோலிய இரசாயனக் கைத்தொழிலினால் தற்பொழுது எதிர்கொள்ளப்படும் **நான்கு** பிரதான பிரச்சினைகளை விவரிக்குக. (08 புள்ளிகள்)

* * *

The National e-learning Portal for The General Education